28.11.2023

**SC No**. 580 / 2018 **PW**. 2. மீர்கலீம்ஷா

<u>எதிரி ஆஜர்.</u>

**இந்நீதிமன்ற Crl.MP.No. 864 / 2022, நாள் 12.08.2022 உத்தரவின் படி சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு, எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.**

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u> :**

2017 ம் ஆண்டில் நான் படித்து முடித்துவிட்டேன் என்றால் சரியல்ல. நான் இதழியல் 2 ம் வருடம் படித்துக்கொண்டு இருந்தேன். பொதுவாக எங்கள் துறையில் வகுப்பறையில் attendance எடுப்பார்கள் என்றால் சரிதான். அன்றைய தினம் First hours ல் ராஜேஷ் சாரின் கிளாஸ். ஆனால் அன்று கிளாஸ் எடுக்கவில்லை. அவர் வருவதற்காக காத்திருந்தோம். கமராஜர் பல்கலைக்கழக்கத்தின் இதழியல் துறை, 2 ம் தளத்தில் வகுப்பறை உள்ளது. தரைத்தளத்தில் தமிழ் துறை உள்ளது. முதல் தளத்ததில் என்ன துறை என்று தெரியாது. முதல் தளத்தில் தான் இதழியல் துறை இருந்தது என்றால் சரியல்ல. முதலாம் ஆண்டு மாணவர்களுக்கு முதல் தளத்தில் தான் வகுப்பு என்றால் சரியல்ல. இரண்டாம் தளத்தில் தான் வகுப்புகள் நடக்கும். ஒரே தளத்தில் வெவ்வெறு அறைகளில் முதலாம் ஆண்டு மாணவர்களுக்கும், 2 ம் ஆண்டு மாணவர்களுக்கும் வகுப்புகள் நடக்கும். இதழியல் துறைக்கான அலுவலகம் 2 ம் தளத்தில் தான் உள்ளது. அலுவலகத்தில் 2 நபர்கள் வேலை பார்த்தார்கள். அதில் ஒருவர் பெயர் சீதா ஆகும். இன்னொருவர் பெயர் தெரியவில்லை. துறைத்தலைவருக்கு அலுவலக உதவியாளர் இருக்கிறார் என்றால் ஞாபகம் இல்லை (சாட்சி முதலில் தெரியவில்லை என்று சொன்னார்). துறைத் தலைவரை பார்க்கவேண்டும் என்றால் நேரடியாகப் பார்க்கமுடியாது என்றும் அலுவலக உதவியாளரிடம் சொல்லித்தான் பார்க்கமுடியும் என்றால் சரிதான். சம்பவ சமயத்தில் நான் இதழியல் துறையில் முதுகலை 2 ம் ஆண்டு படித்து வந்தேன். பொதுவாக முதுகலை 2 ம் ஆண்டு படிக்கும்போது, முதலாம் ஆண்டு முடித்தவுடன் கல்லூரியில் இருந்து internship க்கு அனுப்புவார்கள் என்றால் சரிதான். எங்கு internship அனுப்பிவைப்பார்கள் என்றால் முதலாம் ஆண்டு மாணவர்களுக்கு பத்திரிக்கைத் துறையிலும், 2 ம் ஆண்டு மாணவர்களுக்கு ஊடகவியல் துறைக்கும் அனுப்பி வைப்பார்கள். முதலாம் ஆண்டு மதுரை

தினமணி பத்திரிக்கை அலுவலத்தில் internship க்கு அனுப்பி வைத்தார்கள். 2 ம் ஆண்டு News 18 தமிழ்நாடு க்கும் அனுப்பி வைத்தார்கள். இன்டன்ஷிப்பிற்கு அனுப்பிவைப்பது, துறைத்தலைவரின் விருப்பத்தின் பெயரில் தான் அனுப்பி வைப்பார்கள் என்றால் சரிதான். NEWS18 க்கு என்னை துறைத்தலைவர் தான் என்னை அனுப்பி வைத்தார் என்றால் சரியல்ல. எங்கள் விருப்பப்பட்ட ஊடகத்துறைக்கு அனுப்பி வைப்பார்கள். ஆனால் அங்கு செல்லவேண்டும் என்றால் துறைத்தலைவரின் பரிந்துரை வேண்டும் என்றால் சரிதான். News 18 க்கு இன்டன்ஷிப் எந்த மாதம், எத்தனை நாட்கள் சென்றேன் என்றால் 2017 ம் ஆண்டு டிசம்பர் மாதம் இன்டன்ஷிப்பிற்காகச் சென்றேன். எத்தனை நாட்கள் என்று ஞாபகம் இல்லை. 2017 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதல் அக்டோபர் மாதம் வரை நான் இன்டன்ஷிப்க்காக சென்றிருந்தேன் என்றால் சரியல்ல. நான் News18 க்கு சென்றபோது கல்லூரியில் இருந்து பரிந்துரைக்கடிதம் கொடுத்திருந்தார்கள் என்றால் சரியல்ல. நாங்கள் விருப்பப்பட்ட ஊடத்திற்கு முதலில் மெயில் அனுப்பி வைப்போம். அவர்கள் அதைப்பார்த்து விட்டு வரச்சொல்வார்கள். துறைத்தலைவரின் கடிதமும் கொண்டு செல்வோம். News18 சேனலுக்கு mkalimsha@gmail.com என்ற முகவரியில் இருந்து மெயில் அனுப்பினேன். யாருக்கு அனுப்பினேன் என்ற விபரத்தை எனது மெயிலைப் பார்த்தால் தான் தெரியும். என்னுடைய மெயில் தகவலைப் பெற்று NEWS18 நிறுவனத்தினர் வரச் சொன்ன பிறகு தான் நான் அங்கு இன்டன்ஷிப்ற்காகச் சென்றேன். NEWS18 ன் Email id தற்போது ஞாபகம் இல்லை. தற்போது நான் NEWS7 ல் வேலை பார்க்கிறேன். துறைத்தலைவர் கொடுத்த பரிந்துரைக்கடிதம் எந்த தேதியில் எப்போது கொடுத்தார் என்று ஞாபகம் இல்லை. நான் எந்த தேதியிலிருந்து எந்த தேதிவரை இன்டன்ஷிப்பிற்குச் சென்றேன் என்ற விபரத்தை போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எனது email id-ல் இருந்து அனுப்பிய இமெயில் மற்றும் NEWS18 ல் இருந்து எனக்கு அனுப்பிய இமெயிலைப் பார்த்தால், சம்பவம் நடந்ததாகச் சொல்லப்படும் தேதியில் நான் வகுப்பில் இருந்தேனா என்ற தெரியவரும் என்றால் நான் சம்பவ இடத்தில் இருந்தேன். அந்த ஆவணங்கள் எல்லாம் இந்த வழக்கிற்கு பாதகமாக இருக்கும் என்பதால் தான் அவற்றை மறைத்துள்ளேன் என்றால் சரியல்ல. எங்கள் கல்லூரியில்

எங்களுக்கு அடையாள அட்டை கொடுப்பார்கள். 2ம் ஆண்டு மொத்தம் 5 மாணவர்கள் இதழியல் துறையில் படித்தோம். அன்றைய தினம் நான் கல்லூரிக்குச் சென்றிருந்தால் வருகைப்பதிவேட்டில் இருக்கும் என்றால் சரிதான். எதிரி எங்களுக்கு வகுப்பு எடுத்தாரா என்றால் இல்லை. எங்கள் வகுப்பறையில் வந்து உட்கார்ந்திருப்பார். Guests lecturer ஆக இருந்தார். எதிரி எங்களுக்கு பாடம் எடுக்கவில்லை. எங்களுடன் உட்காந்து அரட்டை அடிப்பார். துறைத்தலைவரை நான் மருத்துவமனைக்குச் சென்று பார்த்தேன் என்றால் சரியல்ல. துறைத்தலைவரை நான் தூக்கவில்லை. அங்கு இருந்த அனைத்து மாணவர்களும் சேர்ந்து தான் அசா1 ஐத் தூக்கினார்கள். எத்தனை மாணவர்கள் இருந்தார்கள் என்று தெரியாது. எனது முதல் விசாரணையில், "ஆஜர் எதிரி எங்கள் பல்கலைக்கழகத்தில் வேலை பார்த்தபோது மாணவிகள் மற்றும் அங்கு வேலை செய்தவர்களிடம் illegal activity ல் ஈடுபட்டார்" என்று சொல்லியுள்ளதில் அது பற்றி எனக்கு நேரடியாகத் தெரியாது என்றால் சரிதான். அதேபோல், "ஆஜர் எதிரி அசா1 இடம் வேலை வேண்டும் என்று கேட்டு டார்ச்சர் செய்தார் "என்று சொல்லியுள்ள விபரம் பற்றி எனக்கு நேரடியாகத் தெரியாது என்றால் சரியல்ல. அவர் வேலை விட்டு எடுத்த பிறகு தினமும் வந்து துறைத்தலைவரிடம் வேலை வேண்டும் என்று கேட்பார். அவர் வெளியில் நின்றபோது, வேலை கேட்டு வந்ததாக என்னிடம் சொன்னார். மேடத்தை கன்வீன்ஸ் பண்ணி வேலை வாங்குவதற்காக நிற்கிறேன் என்று ஆஜர் எதிரி என்னிடம் சொல்லியுள்ளார். முதல் விசாரணையில் ஆஜர் எதிரி illegal activity ல் ஈடுபட்டார் என்றும் அசா1 இடம் வேலை கேட்டு டார்ச்சர் செய்தார் என்று பின்னிட்டு வழக்கிற்காக நான் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. அசா1, பல்கலைக்கழகத்தில் வேலை வாங்கித்தருவதாக பல நபர்களிடம் சொல்லி பணம் வாங்கிக்கொண்டு உறுதி கொடுத்திருந்தார் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. சம்பவம் நடந்ததாகச் சொல்லப்படும் தேதி 26.09.2017 அன்று இதழியல் துறையில் வேலைவாய்ப்பு முகாம் நடந்தது என்றால் இதழியல் துறையில் நடக்கவில்லை. கல்லூரியில் நடந்தது. எத்தனை மாணவர்கள் அந்த முகாமில் கலந்து கொண்டார்கள் என்றால் 100க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டார்கள். வேலை வாய்ப்பு முகாம் நடந்ததால், கல்லூரியில் பேராசிரியர்கள் பரபரப்பாக இருந்தார்கள் என்றால் சரியல்ல. அவர்கள் அறையில் இருந்தார்கள். என்னை விசாரணை செய்த போலிசார், நான் அந்த கல்லூரியில் படிப்பதற்கு ஆதரவாக எனது அடையாள

அட்டையை வாங்கினாரா என்றால் இல்லை. நானும் எனது அடையாள அட்டையைக் கொடுக்கவில்லை. நான் உண்மையிலேயே அங்கு படித்திருந்தால் எனது அடையாள அட்டையை சமர்ப்பித்திருப்பேன் என்றால் சரியல்ல. இதழியல் துறை சம்பந்தமாக வேலைக்குச் செல்லவேண்டும் என்றால் அந்த துறைதலைவரின் சிபாரிசு இருந்தால்தான் வேலைக்குச் சேரமுடியும் என்று சொன்னால் சரியல்ல. கல்லூரி தேர்வில் internal மதிப்பெண் உள்ளது. துறைத்தலைவர் சிபாரிசு இருந்தால் தான் internals ல் அதிக மதிப்பெண் கிடைக்கும் என்றால் சரியல்ல. எங்கள் performance பொறுத்து தான் மதிப்பெண் கொடுப்பார்கள். நான் அசா1 உடன் மருத்துவமனைக்குச் சென்றேன். மருத்துவரிடம் என்ன நடந்தது என்று நான்தான் சொன்னேன் என்றால் சரியல்ல. உண்மையிலேயே நான் மருத்துவமனை சென்றிருந்தால் நடந்த விபரத்தை சொல்லியிருப்பேன் என்றும் விபத்து பதிவேட்டில் எனது பெயர் குறிப்பிடப்பட்டிருக்கும் என்றால் சரியல்ல. சம்பவம் குறித்து நான் எந்த புகாரும் கொடுக்கவில்லை. போலிசார் என்னை சம்பவம் நடந்த அன்றே விசாரித்துவிட்டார்கள். என்னை காவல்நிலையத்திற்கு அழைத்துச் சென்றார்களா அல்லது எனது வீட்டிற்கு வந்தார்களா என்றால் நாகமலைபுதுக்கோட்டை ஆரம்ப சுகாதார நிலையத்தில் வைத்து போலிசார் என்னை விசாரித்தார்கள். என்னை specific ஆக குறிப்பிட்டு விசாரிக்கவில்லை. சம்மன் எதுவும் கொடுத்து விசாரிக்கவில்லை. துறைத்தலைவர் சொல்லித்தான் என்னை போலிசார் விசாரித்தார்கள் என்றால் சரியல்ல. நான் துறைத்தலைவருக்கு வேண்டப்பட்ட நபர் என்றும் நான் அந்த கல்லூரியில் இதழியல் துறையில் படிக்கவில்லை என்றும் துறைத்தலைவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த அன்று வேலை வாய்ப்பு முகாமில் 100 க்கும் மேற்பட்ட நபர்கள் இருந்த நிலையில் என்னை மட்டும் அழைத்து விசாரிக்கவேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. உண்மையில் நான் அந்த கல்லூரியில் மாணவராக இருந்திருந்தால் எனது அடையாள அட்டை, வருகைப் பதிவேடு போன்ற ஆவணங்களைக் கொடுத்திருப்பேன் என்றும் அவ்வாறு நான் அங்கு படிக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. முதல் விசாரணையில் 108 ஆம்புலன்ஸ் வந்தது என்று சொல்லியிருந்தால் அது தவறு என்றால் சரிதான். கல்லூரியில் வேலை வாய்ப்பு முகாம் நடந்ததை முன்னிட்டு அங்கு ஆம்புலன்ஸ் இருந்தது. அந்த ஆம்புலன்சில்

தான் அசா1 ஐ மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம். ஆஜர் எதிரிக்கும் எனக்கும் எந்த பழக்க வழக்கமும் கிடையாது. நான் இதழியல்துறையில் படிக்கவில்லை என்றும் நான் அந்த கல்லூரியில் மாணவர் இல்லை என்றும் அசா1 க்கு நான் வேண்டப்பட்ட நபர் என்பதால் உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு ரயில்வேதுறையில் நல்ல பழக்கம் உள்ளது என்றால் சரியல்ல. எனது உறவினர்கள் யாரும் ரயில்வேதுறையில் வேலை பார்க்கவில்லை. நாகமலைபுதுக்கோட்டை ஆரம்ப சுகாதார நிலையத்தில் வைத்து போலிசார் என்னை விசாரணை செய்தது பின்னிட்டு போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை. என்னை விசாரணை செய்த போலிசாரின் பெயர், பதவி போன்ற விபரங்கள் பற்றி எனக்குத் தெரியாது. அசா1 இதழியல்துறையில் வேலை வாங்கித் தருவதாக பலநபர்களிடம் பணம் வாங்கியுள்ளார் என்றும் அதனால் அசா1 க்கு வேண்டப்படாத நபர் யாரோ தான் அசா1 ஐ தாக்கினார்கள் என்றால் சரியல்ல. நான் உண்மையிலேயே சம்பவத்தைப் பார்த்திருந்து, அசா1 ஐ மருத்துவமனையில் சேர்த்திருந்தால் அசா1 ன் இரத்தக்கரை என் சட்டையில் படிந்திருக்கும் என்றும் அந்த சட்டையை போலிசார் கைப்பற்றியிருப்பார்கள் என்றும் நான் உண்மையிலேயே சம்பவ இடத்தில் இல்லை என்பதால் தான் எனது சட்டையில் இரத்தக்கரை படவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் சம்பவ இடத்தில் இருந்தேன். ஆனால் அசா1 ஐ நான் தூக்கவில்லை. அதனால் இரத்தக்கரை படவில்லை. இதழியல்துறையின் தலைவர் சிபாரிசு இருந்தால் தான் முன்னனி ஊடகவியல் நிறுவனத்தில் வேலைவாய்ப்பு கிடைக்கும் என்பதற்காக அசா1 க்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. முதல் விசாரணையில் சொன்னது போல் சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் சம்பவம் நடக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,
மதுரை